1980 பிப்ரவரி 13]

ஈ. குடகனாறு அணை மீண்டும் கட்டப்பெற வேண்டிய அவசியம் குறித்து.

திரு. சீ. மு. வாசன் : பேரவைத் தலைவர் அவர்களே கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது உடைந்த குடகனாறு அணை மீண்டும் கட்டப்பட வேண்டிய அவசியம் குறித்து''.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் அழகாபுரி கிராமத்தில் குடகனாற்றின் குறுக்கே ஓர் நீர்த்தேக்கம் அமைக்க அரசு ரூ. 212 லட்சம் மதிப்பீட்டிற்கு 1973-ம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. இத் திட்டத்தின் கீழ் 434 மி. கன அடி கொள்ளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதுடன் இருமருங்கிலும் இரு கால்வாய்கள் வெட்டத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வேலைகள் அநேகமாக முடிக்கப்படும் நிலையில் இருந்தபோது 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இதற்கு முன்னர் கண்டிராத பெரிய அளவில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அணை உடைந்து போயிற்று.

2. குடகனாறு அணைக்கு 1977-ம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ள சேதத்தினை ஆராய்வதற்கும் இது சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய மேல் நடவடிக்கைகளை நிர்ணயிக்கவும் ஓரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தன் அறிக்கையை அரசுக்கு இரண்டு பாகங்களாக சமர்ப்பித்துள்ளது. அறிக்கை ஆய்வில் உள்ளது. இந்த அறிக்கையின் மீது அரசு ஒரு முடிவு எடுத்த பின்னர் குடகனாறு அணையை மீண்டும் கட்டுவது பற்றி தீர்மானிக்கப்படும்.

திரு. சீ.மு. வாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அணை உடைந்து கட்டத்தட்ட 2 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆய்வில் இருக்கிறது என்று மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனடியாக இந்த அணையைக் கட்டுகின்ற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, இந்த ஆண்டே அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வரும்.